முனைவர் இசக்கி சுப்பையா: அதாவது, விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் உள்ள உள்ளூர்வாசிகள் ஆதார் அட்டை காண்பித்தாலே அவர்கள் உள்ளூர்வாசிகள் என்பது கண்டிப்பாகத் தெரிந்துவிடும். அதுவே போதுமானது. அடுத்து, புலிகள் காப்பகத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிதி என்று சொல்கிறீர்கள். உள்ளூர்வாசிகள் குறைந்தது ஒரு நாளைக்கு 100 பேர்தான் போவார்கள். 100X30 என்றாலுமே ரூ.3,000 தான் வரும். ஆகவே, தயவுகூர்ந்து அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதுமாதிரி ஒவ்வொரு நீர்வீழ்ச்சிக்கும் நாம் விதிவிலக்கு அளிக்கவேண்டிய சூழ்நிலை வரும். அதனால்தான் நாம் இப்போது கோயிலுக்குச் செல்வதற்கு எந்த வசூலும் செய்வதில்லை. நீர்வீழ்ச்சிக்கு விதிவிலக்கு அளிக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

219—

தார்ச்சாலை அமைத்தல்

***11922—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, வேப்படி பாலக்காடு கிராமத்திற்குத் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2023 அக்டோபர் 10]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விளிம்புநிலை மக்கள்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபிக்கும்வகையில் 4-10-2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மூன்று அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அரசுப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவிகளுக்குத் தற்போது மாணவர் ஒருவருக்கு மாதந்தோறும் உணவுக்காக வழங்கப்பட்டு வரும் தொகை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 1,400 ஆகவும், அரசுக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு ரூபாய் 1,100-லிருந்து ரூபாய் 1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். ஆதி திராவிடர் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர் தங்கும் விடுதிகளைப் பழுது நீக்கம் செய்து சீரமைக்க சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும். பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்த தேவையான அனுமதிகளை வழங்க தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு வழிக்காட்டுக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் துறையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், பச்சைமலை ஊராட்சி, வேப்படி பாலக்காடு குக்கிராமம் முதல் நல்லமாத்தி குக்கிராமம் வரை 8.309 கிலோ மீட்டர் ஆகும். இந்த 8.309 கிலோ மீட்டர் சாலையானது தற்போது மண் சாலையாக உள்ளது. மேலும், இதற்கான இடம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தற்போதைய நடைமுறையின்படி வனத் துறையின்கீழ் உள்ள நிலத்தில் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு வனத் துறையிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, உரிய விதிகளின்படி தடையின்மைச் சான்று பெற்று, தார்ச்சாலையாக மாற்ற நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, இருபெரும் தலைவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், புரட்சித் தமிழர் ஐயா எடப்பாடியார் அவர்களை வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கெங்கவல்லி தொகுதி, பச்சைமலை ஊராட்சி, வேப்படி பாலக்காடு* SC/ST *மக்கள் வாழக்கூடிய கிராமம் ஆகும். இவர்கள் பச்சைமலைக்குச் செல்ல வேண்டுமானால் 50 கிலோ மீட்டர் தூரம் திருச்சி மாவட்டம், சோபனாபுரம் வழியாகச் சுற்றி செல்ல வேண்டும். ஆகவே, வேப்படி பாலக்காடு முதல் நல்லமாத்தி வரை 8.3 கிலோ மீட்டர் தூரம் தார்ச்சாலை அமைத்துக்கொடுத்தால் இவர்கள் சிரமமில்லாமல் பச்சைமலைக்கு மேலே சென்று வருவார்கள். ஆகவே, இந்தத் தார்சாலையை அமைத்துக் கொடுத்தால் அந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, இந்தத் தார்ச்சாலையை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உரிமைச் சட்டம், 2006–ன்படி வனப் பகுதியில் வாழும் மக்களுக்குச் சாலை வசதி ஏற்படுத்திட அதிகபட்சமாக ஒரு ஹெக்டருக்குள் நிலம் தேவைப்பட்டு, அதிகபட்சமாக 75 மரங்கள்வரை அகற்ற வேண்டியிருப்பின் கோட்ட வன அலுவலரின் அனுமதியுடன் வனத் துறையிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டாலோ அல்லது ஒரு ஹெக்டருக்கும் அதிகமான நிலத் தேவை மற்றும் 75 மரங்களுக்குமேல் அகற்ற வேண்டியிருப்பின் சுற்றுச்சூழல் துறையின் அனுமதியுடன் வனத் துறையின்மூலம் முன்மொழிவுகள் பெறப்பட்டாலோ பணிகள் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள பகுதியானது, கெங்கவல்லி வனச் சரகத்திற்குட்பட்ட வேப்படி பாலக்காடு முதல் நல்லமாத்தி*

வரையுள்ள பாதையை தார்ச்சாலையாக மாற்றுவது குறித்து, DRDA மூலம் survey எடுக்கப்பட்டதில் சாலை அமைப்பதற்குத் தேவையான வனப் பகுதி ஒரு ஹெக்டருக்குமேல் இருப்பதாலும், 75 மரங்களுக்குமேல் அகற்ற வேண்டியிருப்பதாலும் ஒன்றிய அரசின் PARIVESH portal இணையதளத்தில் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஆத்தூர் வனக் கோட்ட அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டு, பழங்குடியினர் நலத் துறையால் முன்மொழிவுகள் பெறப்படும்பட்சத்தில் சாலைகள் போட பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலையின் மேலே வாழக்கூடிய மக்கள், அவர்களுக்குத் தேவையான சலுகைகளைப் பெறவேண்டுமென்றால், கீழே கெங்கவல்லி தாலூகாவில் இருக்கும் தாலுகா அலுவலகத்திற்கும், Union office-க்கும், திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் வழியாகச் சென்று தம்மம்பட்டி வழியாக வருவதால் சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்துதான் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். ஆகவே, அவர்கள் மிகவும் சிரமப்படுவதால், மாயம்பாடியிலிருந்து 95-பேளூர், கூடமலை வழியே கெங்கவல்லி தாலுகா அலுவலகம் வரை 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார்ச்சாலை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளபடி பழங்குடியினர் நலத் துறைமூலம் சாலைகள் அமைக்கும்போது வனத் துறை அனுமதி, சுற்றுச்சூழல் அனுமதி இவையெல்லாம் பெற்றுத்தான் அமைக்க முடியும். அதுமட்டுமல்லாமல், ஒன்றிய அரசின் PARIVESH portal மூலம்

ஒரு ஹெக்டருக்குமேல் நிலம் தேவையென்றால் மரங்கள் வெட்ட அனுமதி பெறப்பட்ட பிறகுதான் அத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15 கிலோ மீட்டர் தொலைவிற்குத் தார்ச்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதனைக் கவனத்துடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 17 முதல் 22 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

வணிக வரி நிலுவை, சிறு வணிகர் நலன் காத்திட புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். (குறுக்கீடு) இதனை முடித்துவிட்டு, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு பேரவை விதி 110–ன்கீழ் ஓர் அறிக்கையை இந்த அவையில் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள வணிகர், வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும்,

@ 323 முதல் 855 வரையிலான பக்கங்களில் பாகம் 2-ல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.